MCOP: 50/2020

Date:14.08.2025

பெயர் : பாப்பாத்தி

மனுதாரர் தரப்பு சாட்சி 1.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. புகார் கொடுத்தபோது என் மகன் மீது மோதிய வண்டியின் அடையாளம் தெரியாது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். KA 53 ME 2599 வாகனமானது விபத்தில் சம்மந்தப்படாததால் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டஈடு அளிக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் தொழில், வருமானம், காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்தில் இறந்துபோன காமராஜ் எனது மகன் என்றால் ஆமாம். விபத்தின்போது எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் ஆமாம்.

2. என் மகன் மீது மோதி வாகனம் வேறு வாகனம் என்றாலும், நஷ்டஈடு பெறுவதற்காக 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. துருலாபம் அடைவேண்டும் என்பதற்காக விபத்தில் சம்மந்தப்படாத இந்த வாகனத்தை திரித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.